# விசேட அறிவித்தல்

**வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் PSTF முன் அனுமதி இல்லாமல் மாலைதீவு வழியாக இலங்கைக்குள் செல்ல முயன்று வருவதாக COVID-19 (PSTF) தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவால் கொழும்பின் வெளியுறவு அமைச்சகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது,. இதுபோன்ற நபர்கள் மத்திய ஐரோப்பா உள்ளிட்ட பல்வேறு இடங்களிலிருந்து சாதாரண பயணிகள் விமானங்களில் மாலைதீவுக்கு பயணம் செய்து இலங்கைக்கு செல்ல முயற்சிப்பதாகவும் ஆனால், இலங்கைக்குச் செல்ல PSTF முன் அனுமதி இல்லாததால் மாலே (Male) இல் சிக்கித் தவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இதன் காரணமாக PSTF முன் அனுமதி இல்லாமல் மாலைத்தீவின் மாலே(Male) வழியாக இலங்கைக்குத் திரும்புவதைத் தவிர்க்குமாறு இலங்கையர்கள் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். இலங்கைக்கு திருப்ப விரும்பும் சுவிட்சர்லாந்தில் உள்ள இலங்கையர்கள், "Request Assistance to Return Sri Lanka" என்ற தலைப்பில் prun.geneva@mfa.gov.lk க்கு மின்னஞ்சல் அனுப்புவதன் மூலம் விண்ணப்பத்தை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பணியகம்**
**ஜெனீவா**
**15.09. 2020**